


**12. 02. 2026**

தலைப்புச் செய்திகள்

1. மத்திய அரசின் சீர்த்திருத்தங்களின் செயலாக்கத்தை நிதிநிலை அறிக்கை பிரதிபலிப்பதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

2. மின் மிகை நாடாக இந்தியா தற்போது உருவெடுத்துள்ளதாக மத்திய மின்துறை இணையமைச்சர் திரு. ஸ்ரீபத் யசோ நாயக் மக்களவையில் கூறியுள்ளார்.

3. தொழில்துறை உறவுகள் சட்டத்திருத்த மசோதா மீதான விவாதம் மக்களவையில் இன்று தொடங்கியது.

4. தொழில்துறையினருக்கு நம்பிக்கை அளிக்கும் மாநிலமாக தமிழகம் திகழ்கிறது என்று முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார்.

5. ரூர்கெலாவில் ப்ரோ லீக் ஆடவர் ஹாக்கி போட்டியில் இந்தியா இன்று அர்ஜெண்டினாவை எதிர்கொள்கிறது.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖❖

பிரதமர்

நாட்டில் பல்வேறு சீர்த்திருத்தங்களுக்கான செயலாக்கத்தை மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமனின் நிதிநிலை அறிக்கை பிரதிபலிப்பதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

மக்களவையில் பட்ஜெட் மீதான விவாதத்திற்கு நிதியமைச்சரின் பதிலுரை தொடர்பான காணொலியை பகிர்ந்துள்ள பிரதமர், சிறு குறு நடுத்தர தொழில் நிறுவனங்கள், திறன் மேம்பாடு, அடுத்த தலைமுறையினருக்கான கட்டமைப்புகள், கல்வி உள்ளிட்டவற்றை இந்த நிதிநிலை அறிக்கை சிறப்பாக முன்னெடுத்து செல்வதாக பாராட்டியுள்ளார்.

தேசத்தின் பொருளாதார மாற்றங்களுக்கு வரும் நிதியாண்டிற்கான பட்ஜெட் எவ்வாறு பங்களிக்கும் என்பது குறித்து நிதியமைச்சர் விரிவான வரைபடத்தை வழங்கியிருப்பதாகவும் பிரதமர் கூறியுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖❖

ஸ்ரீபத் யசோநாயக்

மின் மிகை நாடாக இந்தியா தற்போது உருவெடுத்துள்ளது என்று மத்திய மின்துறை இணையமைச்சர் திரு. ஸ்ரீபத் யசோநாயக் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் துணை கேள்விகளுக்கு இன்று பதிலளித்த அவர், பிரதமர் திரு. நரேந்திரமோடி தலைமையிலான ஆட்சியில் 2014-ம் ஆண்டிலிருந்து மின் துறையில் பல்வேறு சீர்த்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டதாக எடுத்துரைத்தார்.

அண்டை நாடுகளுக்கும் மின் விநியோகம் செய்யும் நாடாக இந்தியா தற்போது திகழ்கிறது என்றார்.

நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதில் மின்துறை இன்றியமையா பங்காற்றுவதாக கூறினார்.

நிதி கட்டமைப்பின் மூலம் மின் விநியோகத் துறையை வலுப்படுத்துவதை நோக்கமாக கொண்டு மின் திருத்த மசோதா விரைவில் தாக்கல் செய்யப்படும் என்றும் திரு. யசோநாயக் தெரிவித்தார்.

❖❖❖❖❖❖❖❖❖

மக்களவை

தொழில்துறை உறவு சட்டத்திருத்த மசோதா 2026-ஐ மக்களவை இன்று பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டுள்ளது.

மத்திய தொழிலாளர் வேலைவாய்ப்புத்துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா நேற்று மக்களவையில் அறிமுகம் செய்த இந்த மசோதா 2020-ம் ஆண்டின் தொழிற்சாலைகள் உறவு சட்டவிதியில் திருத்தங்களுக்கு வகை செய்கிறது.

இந்த மசோதா தொடர்பான விவாதத்தை தொடங்கி வைத்து பேசிய காங்கிரஸ் உறுப்பினர் திரு. கொடிக்குன்னில் சுரேஷ், இந்த சட்டத் திருத்தம் ஒரு சீர்த்திருத்தம் அல்ல என்றார்.

நாட்டில் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களின் விகிதம் அதிகரித்துள்ள நிலையில், வேலைவாய்ப்புகளுக்கான வசதிகள் ஏற்படுத்துவதை விட்டுவிட்டு அரசு அவற்றை பலவீனப்படுத்துவதாக குற்றம் சாட்டினார்.

பி.ஜே.பி. உறுப்பினர் திரு. தர்ஷன்சிங் சௌத்ரி பேசுகையில் தொழிலாளர்களின் நலன்களை இந்த மசோதா பாதுகாப்பதாகவும், தொழிற்சாலைகளின் இலகுவான வர்த்தகத்திற்கு இது வழிகோலும் என்றும் குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖❖❖

மக்களவை ஒத்திவைப்பு

எதிர்கட்சிகளின் அமளி காரணமாக மக்களவை நண்பகல் 12 மணி வரை இன்று ஒத்திவைக்கப்பட்டது.

அவை இன்று கூடியதும், அவை நடத்தும் அலுவலர் திரு. கிருஷ்ணபிரசாத் கேள்வி நேரத்தை எடுக்க முயன்ற போது காங்கிரஸ், திரிணமுல் காங்கிரஸ், திமுக உள்ளிட்ட எதிர்கட்சிகள் அவையின் மையப்பகுதியில் குழுமி முழக்கமிட தொடங்கின.

கேள்வி நேரத்தை நடத்த ஒத்துழைக்க வேண்டுமென்ற அவை நடத்தும் அலுவலரின் கோரிக்கைக்கு யாரும் செவிமடுக்காததல் மக்களவை நண்பகல் வரை ஒத்திவைக்கப்பட்டது.

❖❖❖❖❖❖❖❖❖

பிரல்ஹாத் ஜோஷி

எதிர்கட்சித் தலைவர் திரு. ராகுல் காந்தி எவ்வித ஆதாரமும் இல்லாமல் மக்களவையில் அறிக்கைகளை வெளியிடுவதாக மத்திய அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி குற்றம்சாட்டியுள்ளார்.

நாடாளுமன்ற வளாகத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர், திரு. ராகுல் காந்தி மீதான உரிமை மீறல்

தொடர்பான முடிவுகள் நாடாளுமன்ற விவகாரங்கள் அமைச்சகத்திற்கு உட்பட்டது என்றார்.

திரு. ராகுல் காந்தி அவையின் உள்ளேயும், வெளியேயும், முதிர்ச்சியற்ற வகையில் செயல்படுவதாக திரு. பிரல்ஹாத் ஜோஷி குறை கூறினார்.

❖❖❖❖❖❖❖❖❖

மாநிலங்களவை

மாநிலங்களவையில் பொது கணக்கு மற்றும் பொதுத்துறை குழுவிற்கு 7 உறுப்பினர்களை தேர்ந்தெடுப்பதற்கான தீர்மானத்தை மத்திய இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் கொண்டுவந்தார்.

குரல் வாக்கெடுப்பு மூலம் இத்தீர்மானம் நிறைவேறியது.

அதேபோல் SC ST நலம் சார்ந்த குழுவை ஏற்படுத்துவதற்கான 10 உறுப்பினர்களை தேர்வு செய்வதற்கான தீர்மானமும் அவையில் கொண்டுவரப்பட்டது.

முன்னதாக அவை இன்று கூடியபோது பூஜ்ஜிய நேரத்தில் பல்வேறு அமைச்சர்கள் தத்தம் துறை சார்ந்த பல்வேறு அறிக்கைகளை அவைத்தலைவர் திரு. சி. பி. ராதாகிருஷ்ணன் அனுமதியுடன் தாக்கல் செய்தனர்.

அதேபோல் உயர் முன்னுரிமை சார்ந்த பிரச்சனைகளையும் அவைத் தலைவரின் ஒப்புதலின் பேரில் உறுப்பினர்கள் அவையில் எழுப்பினர்.

❖❖❖❖❖❖❖❖❖

அமெரிக்க ஏற்றுமதி

இந்திய அமெரிக்கா வர்த்தக ஒப்பந்தத்தால் வருடாந்திர வணிகம் 90 பில்லியன் டாலரை தாண்டும் என்று பாரத ஸ்டேட் வங்கியின் ஆய்வறிக்கை தெரிவித்துள்ளது.

ஐரோப்பிய யூனியன் மற்றும் பிரிட்டன் நாடுகள் உடனான வர்த்தக ஒப்பந்தங்களை தொடர்ந்து அமெரிக்காவுடன் எட்டப்பட்ட ஒப்பந்தத்தால் இந்தியாவின் ஏற்றுமதி உயர்வதோடு லாபமும் அதிகரிக்கும் என்று அந்த அறிக்கை கூறுகிறது.

பூர்வாங்க கணிப்புகளின் படி 15 முக்கிய பொருட்களின் ஏற்றுமதியால் ஆண்டுக்கு 97 பில்லியன் டாலர் வருவாய் கிட்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதரப் பொருட்களின் ஏற்றுமதி திறனால் வர்த்தகம் 100 பில்லியன் டாலரையும் தாண்டும் என எதிர்பார்க்கப் படுகிறது.

❖❖❖❖❖❖❖❖❖

அமித்ஷா

தமிழகத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா நாளை திருச்சி வரவுள்ளார்.

அமைச்சரின் வருகையை ஒட்டி நாளையும், நாளைமறுநாளும் மாவட்டத்தில் ட்ரோன் பறக்க தடைவிதிக்கப்பட்டுள்ளதாக ஆட்சித்தலைவர் திரு. சரவணன் அறிவித்துள்ளார்.

தடையை மீறுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்

தொழில்துறையினருக்கு நம்பிக்கை அளிக்கும் மாநிலமாக தமிழகம் திகழ்கிறது என்று முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் கூறியுள்ளார்.

சென்னையில் முதலீட்டு செயலாக்க மாநாட்டை இன்று துவக்கி வைத்து பேசிய அவர், கடந்த4 ஆண்டுகளில் 30 தொழில் பூங்காங்கள் உருவாக்கப்பட்டுள்ளது என்றார்.

இந்நிகழ்ச்சியில் 74 ஆயிரத்து 267 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 71 புதிய முதலீடு திட்டங்களுக்கு இன்று அடிக்கல் நாட்டினார்.

52 தொழில் நிறுவன திட்டங்களையும் தொடங்கிவைத்தார். இம்மாநாட்டில் 2 புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் கையெழுத்தாயின.

இப்புதிய திட்டங்களின் மூலம் ஒன்றரை லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு உறுதி செய்யப்பட்டுள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

சென்னை கொருக்குபேட்டையில் 75 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்படவுள்ள மேம்பாலத்திற்கு அடிக்கல் நாட்டிய முதலமைச்சர் சந்திக்கடவில் 96 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய மேம்பாலத்தையும் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்துவைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய மாநில தொழிற்துறை அமைச்சர் திரு. TRB ராஜா 7 நியோ டைடல் பூங்காதமிழகத்தில் அமைக்கப்பட்டுள்ளது என்றார்.

❖❖❖❖❖❖❖❖❖

திருப்பத்தூர் வாய்ஸ்

திருப்பத்தூரில் 79 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமையவுள்ள புறவழிச்சாலை பூர்வாங்க மாநில பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எ.வ.வேலு இன்று துவக்கி வைத்தார்.

இப்புறவழிச்சாலை திருப்பத்தூர், தர்மபுரி, கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை வேலூர் ஆகிய மாவட்டங்களை இணைக்கும் என்று அவர் கூறினார்.

.. வாய்ஸ் ..

மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக வளாகத்தில் மின்னணு வாக்குப்பதிவு கருவிகளை சேமிப்பதற்கான கிடங்கு கட்டும் பணிகளையும் அமைச்சர் துவக்கிவைத்தார்.

❖❖❖❖❖❖❖❖❖

தர்மபுரி வாய்ஸ்

தர்மபுரி மாவட்டத்தில் மாவட்ட சட்டப்பணிகள் ஆணையக்குழு சார்பில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் இன்று நடைபெற்றன.

குழந்தை திருமணங்களை தடுப்பது குறித்த விழிப்புணர்வின் அவசியத்தை சட்டபணிகள் ஆணையக்குழு தலைவரும், மாவட்ட முதன்மை நீதிபதியுமான திருமகள் வலியுறுத்தினார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖

இருவரி

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை பாதுகாப்பான முறையில் பயன்படுத்துவதை மாணாக்கர் அறிந்துகொள்ள வேண்டடியதன் அவசியத்தை சிவகங்கை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பொற்கொடி வலியுறுத்தியுள்ளார்.

சிங்கம்புனரியில் தேசிய தகவல் மையத்தின் சார்பில் நடைபெற்ற இணைய பாதுகாப்பு நாள் விழாவில் இன்று பேசிய அவர், சைபர் குற்றம் தொடர்பான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மாணாக்கரிடம் எடுத்துரைத்தார்.

❖❖❖❖❖❖❖❖❖

ஹாக்கி

ஒடிஷா மாநிலம் ரூர்கேலாவில் நடைபெறும் ப்ரோ லீக் ஆடவர் ஹாக்கி போட்டியில் ஹர்மன் பிரீத் சிங் தலைமையிலான இந்திய அணி இன்றிரவு ஏழரை மணிக்கு அர்ஜெண்டினாவை எதிர்கொள்கிறது.

நேற்று நடைபெற்ற போட்டியில் இந்தியா - பெல்ஜியத்திடம் தோல்வியடைந்தது.

நாளைமறுநாள் இந்தியா பெல்ஜியத்துடன் மீண்டும் மோதுகிறது.

❖❖❖❖❖❖❖❖❖

டென்னிஸ்

சென்னையில் நடைபெறும் சேலஞ்சர்ஸ் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் அரையிறுதிக்கு இந்தியாவின் கலியாண்ட பூனாச்சா, தாய்லாந்தின் Pruchya Isaro இணை முன்னேறியுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖

கிரிக்கெட்

ICC உலக கோப்பை 20-20 கிரிக்கெட் போட்டியில் டெல்லியில் நடைபெறும் ஆட்டத்தில் இந்தியா – நமீபியாவை இன்றிரவு 7 மணிக்கு எதிர்கொள்கிறது.

பல்லேகேலாவில் நடைபெறும் இலங்கைக்கு எதிரான போட்டியில் 226 என்ற வெற்றி இலக்குடன் விளையாடும் ஓமன் சற்றுமுன் 13 ஓவரில் 6 விக்கெட் இழப்பிற்கு 93 ரன் எடுத்திருந்தது.

❖❖❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖❖❖